தூத்துக்குடி மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
நக.எண். 3930/ ஆ4/2016 நாள் 31.01.2017

பொருள்– நிர்வாகம் – உதவி பெறும்பள்ளிகள் – தூத்துக்குடி மாவட்டத்தின் தி ரோமன் கத்தோலிக்க டயோசீசன் என்ற அமைப்பின்கீழ் செயல்படும் ஆர்.சி.பள்ளிகளை சிறுபான்மை தகுதியற்றதாக அறிவிக்க பரிந்துரை செய்யக் கோரியது – கருத்துருக்கள் பரிசீலனைக்குப்பின் ஆணையிடுதல் சார்பு–

பார்வை– 1. மனுதாரர் திரு. எஸ்.பீட்டர்ராஜ் என்பாரது மனு நாள் 05.09.2015
2. இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடித நாள் 13.08.2016
3.சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண். பிள்யு.பி.(MD)No,11252/2016ன் தீர்ப்பாணை நாள் 28.06.2016
4. இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடித நாள் 06.09.2016
5.மதுரை கிளை உயர்நீதிமன்ற கூடுதல் வழக்கறிஞரின் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு அறிவிப்பு நாள் 11.11.2016
6.தூத்துக்குடி மாவட்டக் கல்வி அலுவலரின் பள்ளி பார்வைகள் 23.11.2016 முதல் 28.12.2016முடிய
7.சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண WP NO 570/75 தீர்ப்பு நாள் 24.09.76
8.சென்னை பள்ளிக் கல்வி செயல்முறைகள் நகஎண். 24541/ஜி3/76 நாள் 20.11.1976

----

தூத்துக்குடி மாவட்டத்தில் தி ரோமன் கத்தோலிக்க டயோசீசன் தூத்துக்குடி என்ற அமைப்பின் கீழ் செயல்படுட்ம ஆர்.சி.பள்ளிகள் அனைத்தும் சிறுபான்மை அற்றவையாக விளம்புகை செய்யுமாறு கோரி மனுதாரர் திரு.எஸ்.பீட்டர்ராஜ் என்பார் 5.09.2015 நாளிட்ட மனுவில் தெரிவித்திருந்தார். மனுதாரரது 05.09.2015 நாளிட்ட மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. அதில் (1)மேற்படி நிர்வாகம் சிறுபான்மை அற்றது என அறிவிக்ககோரி அரசுக்கு பரிந்துரை செய்யவும், 2) ரோமன் கத்தோலிக்க டயோசிசன் தூத்துக்குடி நிர்வாகத்தின் கீழ் செயல்படும் அனைத்துப்பள்ளிகளையும் ஆய்வு செய்து உண்மை நிலை அறிந்து விதிகளுக்கு உட்பட்டு பள்ளிகளின் அங்கீகாரத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்குமாறும், (3) மேற்படி பள்ளிகளுக்கு வழங்கும் அரசு மான்யத்தை நிறுத்துமாறும் வழங்கிய மான்யத்தை திரும்ப பெறவும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டது.

மேற்படி நிர்வாகத்தின் கீழ் செயல்படும் ஆர்.சி. பள்ளிகள் அனைத்தையும் தொடர்பு கொண்டு சிறுபான்மை அந்தஸ்துக்கு உரிய ஆவணங்களை சமர்ப்பிக்க பார்வை 2 கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது. அனைத்துப்பள்ளிகளிலிருந்தும் சிறுபான்மை அந்தந்தஸ்து குறித்து ஒரே வகையான ஆவணங்களே பெறப்பட்டது. இந்நிலையில் மனு தாரர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை

Scanned by CamScanner

கிளையில் பார்வை 3ல் கண்ட வழக்கு எண் WP(MD) NO 11252/2016 க்கு 28.06.2016 நாளிட்ட தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளது. இதில் மனுதாரரின் கோரிக்கைகளை நன்கு பரிசீலிக்குமாறும் பள்ளி ஆவணங்களை பார்வையிட்டு உரிய ஆணை வழங்குமாறும் தீர்ப்பிடப்பட்டிருந்தது.

சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண் WP(MD) NO 11252/2016 ன் 28.06.2016 நாளிட்ட தீர்ப்பாணைக்கு இணங்க தூத்துக்குடி மாவட்டத்தில் தி ரோமன் கத்தோலிக்க டயோசிசன் தூத்துக்குடி என்ற அமைப்பின் கீழ் செயலபடும் அனைத்து ஆர்.சி பள்ளிகளும் (19) , நேரில் பார்வையிட்டு நிலம் சம்மந்தப்பட்ட ஆவணங்கள், பள்ளி அங்கீகார ஆணைகள், அது தொடர்பான ஆவணங்கள், சிறுபான்மை அந்தஸ்து குறித்து பள்ளிகளில் பராமரிக்கப்படும் ஆவணங்கள் மற்றும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அரசு நிர்ணயம் செய்த பணியிடங்கள் போன்ற இனங்கள் 23.11.2016 முதல் 28.12.2016 முடிய நேரில் ஆய்வு செய்யப்பட்டது. மேற்படி நிர்வாகம் சிறுபான்மை அந்தஸ்துக்காக கல்வித்துறைக்கு சுயமாக தயார்செய்து ஆவணங்களை கொடுத்துள்ளது என மனுதாரர் கூறிவருகிறாரே தவிர அதற்கு ஆதாரமான முறையான அவணங்களை முன்நிலைப்படுத்தவில்லை.

மனுதாரரின் கோரிக்கை மீது தி ரோமன் கத்தோலிக்க டயோசீசன் தூத்துக்குடி என்ற அமைப்பின் கீழ் செயலபடும் அனைத்துப்பள்ளிகளின் ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்து ஆய்வு மேற்கொண்டதன் அடிப்படையில் கீழ்கண்டவாறு உரிய ஆணை வழங்கப்படுகிறது. தி.ரோமன் கத்தோலிக்க டயோசீசன் என்ற நிர்வாகம் சுயமாக தயார் செய்துள்ள தவறான ஆவணங்களை கல்வித் துறைக்கு கொடுத்து சிறுபான்மை அந்தஸ்து உள்ளதென கூறி வருவதாக மனுதாரர் தெரிவித்துள்ள கருத்து தவறாகும் ஊகமானதாகும். நிர்வாகத்தின் கீழ் செயலபடும் அனைத்துப்பள்ளிகளையும் நேரில் ஆய்வுசெய்தபோது அப்பள்ளிகளில் அனைத்திலுமே ஒரே வகையான ஆவணங்களே காணப்பட்டது. பள்ளி நிர்வாகம் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண். WP NO 570/75 தீர்ப்பாணை நாள் 24.9.1976ல் நிர்வாகம் சிறுபான்மை அந்தஸ்து உள்ளதென தீர்ப்பிடப்பட்டுள்ளது . மேலும் சென்னை பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் நக.எண். 24541/ஜி3/76 நாள் 20.11.76ன்படி நிர்வாகம் சிறுபான்மை தகுதியுடையது என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே நீண்ட நாட்களாக இயங்கிவரும் கல்வி முகவாண்மை மேற்கண்ட ஆவணங்கள் மூலம் சிறுபான்மை நிர்வாகம் என உறுதி செய்யப்படுகிறது.

தி ரோமன் கத்தோலிக்க டயோசீசன் தூத்துக்குடி என்ற அமைப்பின் கீழ் செயலபடும் பள்ளிகளின் அங்கீகாரக் கருத்துருக்கள் நேரில் ஆய்வு செய்யப்பட்டது. அனைத்துப்பள்ளிகளும் ஒரே நிர்வாகத்தின் கீழ் செயலபடுவதால் பள்ளி இருப்பிடங்கள் அனைத்தும் ஒரே நிர்வாக அமைப்பின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது . மேலும் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை பள்ளி அங்கீகாரத்திற்கு தேவையான கட்டிட உறுதிச்சான்று, வட்டாட்சியரின் அனுமதிச்சான்று, மாணக்கர்களுக்கான சுகாதாரச்சான்று , விபத்து தடுப்பு தீயணைப்பு சான்று போன்ற சான்றுகள் அனைத்தும் முறையாக உள்ளது. எனவே பள்ளி அங்கீகார ஆணையை ரத்து செய்ய பரிந்துரை செய்ய அவசியம் எழவில்லை.

Scanned by CamScanner

தி ரோமன் கத்தோலிக்க டயோசீசன் தூத்துக்குடி என்ற அமைப்பின் கீழ் தூத்துக்குடி மாவட்டத்தில் செயல்படும் அனைத்துப்பள்ளிகளுக்கும் வழங்கப்படும் மான்யம் தொடர்பான ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது. பள்ளிகளுக்கு அரசால் அனுமதிக்கப்படும் பணியிடங்களுக்கு மட்டுமே அரசு மான்யம் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு பள்ளிக்கும் பணியாற்ற அனுமதிக்கப்படும் ஆசிரியர்களின் எண்ணிக்கை தூத்துக்குடி முதன்மைக் கல்வி அலுவலர்/ மாவட்டக் கல்வி அலுவலர்களால் நிர்ணயம் செய்து ஆணைவழங்கப் படுகிறது. அரசால் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களுக்கு மட்டுமே மான்யங்கள் வழங்கப்பட்டு வருகிறது . எனவே பள்ளிகளுக்கு வழங்கப்படும் மான்யத்தை நிறுத்தவோ அல்லது வழங்கிய மான்யத்தை திரும்ப பெறவோ வேண்டிய அவசியம் எழவில்லை என ஆணை வழங்கப்படுகிறது.

மாவட்டக் கல்வி அலுவலர்(பொ)
தூத்துக்குடி

பெறுநர்
திரு.எஸ். பீட்டர்ராஜ்.
9 அரிசிக்கடை தெரு,
சாத்தான்குளம்.

Scanned by CamScanner